## கழக முப்பெரும் விழா விருதுகள்

# கொள்கை உறுதிக்கான கழகத்தின் பரிசு!

பழுத்த மட்டை விழுவதும், குருத்தோலை வளர்வதும் தென்னை மரத்திற்கு இயல்பு. விழுவதைக் கண்டு தென்னைமரம் பதறுவதில்லை. புதிதாக வளர்வது எது என்பதில்தான் தென்னை மரத்தின் கவனம் இருக்கும்.

**75 ஆண்டுகளைக் கடந்த திராவிட முன்னேற்றக் கழகம் எனும் சமுதாய மறுமலர்ச்சிக்கான அரசியல் இயக்கம், தேர்தல் களத்தில் ஏற்படும் வெற்றி கள்தோல்விகளைக் கண்டு பதறுவதில்லை. தோல்வியின் வலியைவிட, இயக்கத்தின் வலிமையில்தான் தி.மு.க. கவனம் செலுத்தும்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைத் திருவிழாவான முப்பெரும் விழாவை யொட்டி 2026ஆம் ஆண்டுக்கான விருதுகளை அறிவித்திருக்கிறார் கழகத் தலைவர் நம் திராவிட நாயகர். பெரியார் விருது கழக விவசாய அணியின் துணைச் செயலாளர் கு.செல்லப்பா அவர்களுக்கும், அண்ணா விருது சேலம் மத்திய மாவட்ட அவைத் தலைவர் சேலம் ஜி.கே.சுபாஷ் அவர்களுக்கும், கலைஞர் விருது கழக துணைப் பொதுச்செயலாளரும் தி.மு.க.வின் மாநிலங்களவைக் குழுத் தலைவருமான திருச்சி சிவா எம்.பி. அவர்களுக்கும், பாவேந்தர் விருது கழக மருத்துவ அணித் தலைவரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு அவர்களுக்கும், பேராசிரியர் விருது தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா எஸ்.அகமது தம்பி அவர்களுக்கும், மு.க.ஸ்டாலின் விருது இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா அவர்களுக்கும் வழங்கப்படவிருக்கிறது. விருது பெறவிருக்கிற அனைவருமே கழகத்தோடு பின்னிப் பிணைந்து தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள். ஒவ்வொருவரும் கழகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளை எதிர் கொண்ட நெருக்கடிகளை முப்பெரும் விழா மேடையில் விரிவாக அறிவிப்பார்கள்.

**கலைஞர் விருது பெறுகிற கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அவர்கள் கல்லூரி மாணவராக மிசா சிறைவாசத்தை எதிர் கொண்டவர். சென்னை மத்திய சிறையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும், திருச்சி மத்திய சிறையில் திருச்சி சிவா அவர்களும் மிசா கைதிகளாக இருந்தார்கள். இருவருமே சிறையிலிருந்து போலீஸ் பாதுகாப்புடன் அவரவர் கல்லூரிகளுக்குச் சென்று தேர்வு எழுதிவிட்டு மீண்டும் சிறைக்குத் திரும்பியவர்கள். தலைமையின் கட்டளையை ஏற்று, வாழ்வின் வசந்தகாலமான இளமைப் பருவத்திலேயே இயக்கத்திற்காகவும் அதன் கொள்கைக்காகவும் சிறைவாசத்தை அனுபவித்த தீரர்கள் கோட்டம்தான் தி.மு.கழகம்.**

நீதிக்கட்சிசுயமரியாதை இயக்கத்தின் காலத்திலிருந்தே பேரறிஞர் அண்ணாவுடன் பயணித்தவர் என்.வி.நடராசன் அவர்கள். தி.மு.க.வின் உருவாக்கத்தில் அண்ணாவுக்குத் துணை நின்றவர். 1938ஆம் ஆண்டு நடந்த முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் என்.வி.நடராசனின் குடும்பம் முழுவதுமே பங்கேற்றது. அவரது துணைவியார் புவனேஸ்வரி அம்மையார் தன் இடுப்பில் கைக்குழந்தையுடன் சிறைக்குச் சென்றார். அந்தக் குழந்தையின் பெயர் சோமசுந்தரம். பின்னாளில், தி.மு.க தொழிற்சங்கத்தில் முக்கிய பங்காற்றி, நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, ஒன்றிய பாதுகாப்புத்துறை இணை அமைச்சராகவும் இருந்த என்.வி.என். சோமு அவர்கள்தான் அந்த சோமசுந்தரம். அப்படிப்பட்ட பாரம்பரியமான கழகக் குடும்பத்தின் வழித்தோன்றல்தான் முப்பெரும் விழாவில் பாவேந்தர் விருது பெறவிருக்கின்ற டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு அவர்கள்.

கழகத்தின் வளர்ச்சிக்காக உழைத்த மூத்த உடன்பிறப்புகளான திரு.கு.செல்லப்பா, ஜி.கே. சுபாஷ், மிசா எஸ்.அகமது தம்பி ஆகியோருடன் இளம் வயதிலேயே டெல்டா மாவட்டக் கழகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு திறம்பட செயல்பட்டு வரும் இளைய உடன்பிறப்பான நா.இளையராஜா அவர்களும் விருதுப் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறார். **மூத்தோர், இளையோர், பெண்மணி, சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர் என கழகத்திற்காகப் பாடுபடும் எல்லாத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து, 2026ஆம் ஆண்டுக்கான தி.மு.க.வின் முப்பெரும் விழா விருதாளர்களைத் தேர்வு செய்து அறிவித்திருக்கிறார் திராவிட நாயகராம் நம் கழக த்தலைவர்.**

கழக உடன்பிறப்புகளின் பணிகளைப் பாராட்டும் விதத்திலும், மூத்தவர்களின் அர்ப்பணிப்பைக் கண்டு, இளைய உடன்பிறப்புகள் ஆர்வத்துடன் கழகப் பணியில் ஈடுபடவும் 1985ஆம் ஆண்டு முதல் கழக முப்பெரும் விழாவில் விருதுகள் வழங்கி சிறப்பிக்கும் வழக்கத்தை உருவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தொடக்கத்தில் பெரியார், அண்ணா, கலைஞர் பெயர்களில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டன. முதன்முதலில் பெரியார் விருது பெற்றவர் தஞ்சைப் பெரியார் என அழைக்கப்பட்ட மன்னை நாராயணசாமி அவர்கள். அந்த ஆண்டு அண்ணா விருது பெற்றவர் இனமானப் பேராசிரியர் அவர்கள். கலைஞர் விருது பெற்றவர் கவிஞர் பொன்னிவளவன் அவர்கள். இந்த மூன்று விருதுகளுடன் அதன்



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்.

பிறகு பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, மு.க.ஸ்டாலின் விருது ஆகியவையும் ஒவ்வொன்றாக இணைந்தன.

மேற்கு மண்டலத்தின் கழகத் தளகர்த்தர்களில் ஒருவராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும் சிறப்பாக செயல்பட்டவர் புஞ்சை புளியம்பட்டி சாமிநாதன். இருவண்ணக் கரைவேட்டியை 1953ஆம் ஆண்டில் முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் அவர்தான். சாமிநாதன் வீட்டில் அண்ணா, கலைஞர், பேராசிரியர் உள்ளிட்ட கழகத்தினர் பலரும் உணவருந்தியவர்கள். அவர்களுக்குத் தன் கையால் பரிமாறியவர் அவரது துணைவியார் சம்பூர்ணம் சாமிநாதன் அவர்கள். எமர்ஜென்சி காலத்தில் சாமிநாதனும்கோவைகழகமுன்னணியினரும் மிசா சட்டத்தில் கைதாகி சிறைக்குச் செல்கிறார்கள். மிசா சிறைவாசிகளின் குடும்பங்களுக்கு கழகத்தின் சார்பில் மாதந்தோறும் 200 ரூபாய் வழங்கப்பட்டது. அப்போது அது பெரிய தொகை.

**எமர்ஜென்சியில் கணவர் சாமிநாதன் சிறைக்குச் சென்ற நிலையிலும், சம்பூர்ணம் சாமிநாதன் அவர்கள் கலங்காமல் கழகப் பணிகளில் ஈடுபட்டார். மிசா சிறைவாசிகளான கோவை மாவட்டக் கழகத்தினரின் வீடுகளுக்குச் சென்று, அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து, கழகத்தின் சார்பில் மாதந்தோறும் 200 ரூபாய், 300 ரூபாய் கொடுத்து வந்தார் சம்பூர்ணம் அம்மாள். கொள்கைக் குடும்பமாகத் திகழ்ந்த சம்பூர்ணம் சாமிநாதன் அவர்களின் கழகப் பணியைப் போற்றும் வகையில் முப்பெரும் விழாவில் அவருக்கு பெரியார் விருது அளித்துச் சிறப்பித்தார் திராவிட நாயகரான கழகத் தலைவர்.**

இரண்டு ஆண்டுகளுக்கு முன் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட சம்பூர்ணம் சாமிநாதன் அவர்கள், இந்த ஆண்டுக்கான விருது அறிவிப்புகள் வெளியான நாளில் மறைவெய்தினார். தலைமைக் கழகத்தின் விருது அறிவிப்பும், அம்மையாரின் மறைவுக்குத் கழகத் தலைவர் தெரிவித்த இரங்கலும் முரசொலியில் ஒரே நாளில் வெளியானது.

**முப்பெரும் விழாவில், தலைவர்கள் பெயரிலான விருதுகளுடன், திறம்படக் கழகப் பணியாற்றி வரும் ஒன்றியநகரபகுதிபேரூர் கழகச் செயலாளர்களும் கழகத் தலைவர் அவர்களால் மேடையில் சிறப்பிக்கப்படுவது வழக்கமாக உள்ளது. மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிடும் கழகம், இளம் உடன்பிறப்புகளை ஊக்குவிக்கும் வகையிலான பாராட்டுகளை இளைஞரணி வாயிலாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.**

தியாகத் தழும்புகளால் உருவான இயக்கம்தான் தி.மு.கழகம். ஆண்டாண்டுகாலமாக பரப்பப்படும் அவதூறுகளை எதிர்கொண்டு முறியடித்து, தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிற மக்கள் இயக்கம் இது. தி.மு.க.வின் பயணத்தில் கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியின் பங்கு மகத்தானது. இன்றளவும் அது தொடர்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர், முரசொலி மாறன் ஆகியோரைத் தொடர்ந்து முரசொலியின் ஆசிரியர் பொறுப்பேற்று, கொள்கை முரசத்தைத் தொடர்ந்தவர் முரசொலி செல்வம் அவர்கள். கழகத் தலைவருக்கு உறவு முறையில் மாமா என்றாலும் அண்ணனாக, தோழனாக இருந்து அரசியலில் வழிநடத்தியவர்.

திராவிட இயக்கக் கொள்கைகளைத் திறம்பட வெளிப்படுத்தும் படைப்பாளிகளைத் தொடர்ந்து ஊக்குவித்து, அவர்களின் படைப்புகளை முரசொலியில் வெளியிட்டு வந்த முரசொலி செல்வம் அவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன் மறைந்த நிலையில், முரசொலி அறக்கட்டளை சார்பில் முரசொலி செல்வம் அவர்களின் பெயரால் முப்பெரும் விழாவில் விருது வழங்கப்பட்டு வருகிறது.

**முரசொலி செல்வம் பெயரிலான முதல் விருது, கடந்த ஆண்டு மூத்த பத்திரிகையாளரும்திராவிட இயக்கம் உருவாக்கிய மாற்றங்கள் தொடர்பாக ஆங்கிலத்தில் பல கட்டுரைகள் எழுதியவருமான ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டுக்கான விருது, கலைஞர் தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியரும், திராவிட இயக்கம் மீதான அவதூறுகளை ஆணித்தரமான வாதங்களால் தவிடுபொடியாக்கும் எழுத்தாளருமான தோழர் ப.திருமாவேலன் அவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.**

முத்தமிழறிஞர் கலைஞர் அடிக்கடி சொன்னது போல, இயக்கத்தின் மூத்த முன்னோடிகள் பழுத்த மட்டைகள். தென்னை மரத்திலிருந்து மட்டைகள் விழுந்தாலும், அவை இருந்த இடம், தழும்புகள் போல மரத்தில் நிலைத்திருக்கும். தென்னை மரத்தில் ஏறுபவர்களுக்கு அவை படிகள் போல உதவும்.

**திராவிட இயக்கம் எந்நாளும் காய்த்துக் குலுங்கி, அனைவருக்கும் பயன் தரும் தென்னை மரம் போன்றது. இளையதலைமுறை உயரச் செல்வதற்கு, விருது பெற்ற மூத்தவர்களின் அனுபவமும் அர்ப்பணிப்பும் தென்னை மரத்தில், மட்டைகள் உதிர்ந்த இடத்தில் உள்ள தழும்புகள் போல நிலைத்திருக்கும். இளம் குருத்தோலைகள் காலந்தோறும் வளரும். அதை உணர்ந்தே, திராவிட அரசியல் பேரியக்கமான தி.மு.கழகத்திற்குத் தேவையான மறுசீரமைப்பை மேற்கொண்டிருக்கிறார் திராவிட நாயகர்.**

# திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி அறிவிப்பு!

*திருப்பத்தூர், செப். 4 -*

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நாளை (05.09.2026 - சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில் வாணியம்பாடியிலுள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள், விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணைச் செயலாளர் வே.கௌதமன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் வி.மு.விஜய கதிரவன் ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்க உள்ளார்கள்.

ஆகவே நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** 22.8.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகம் மறுசீரமைப்பு பணிகள் குறித்து,

கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.தேவராஜி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

*விழுப்புரம், செப். 4 -*

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைப்படி கழக மறுசீரமைப்பு தொடர்பான விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் எனது (மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி) தலைமையில் வரும் 06.09.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.



மாவட்டக் கழக அவைத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழுச் செயலாளர் மோ.தேன்மொழி, தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் புதுச்சேரி மாநில அமைப்பாளர் இரா.சிவா, மாநில மாணவர் அணிச் செயலாளர் திருமதி. ஜெ.வீரமணி ஆகியோர் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

செயற்குழு கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி தெரிவித்துள்ளார்.

### "நாட்டின் முதுகெலும்பு நம் விவசாயிகள்..." எனும் வாய்ச்சொல் மட்டும் உதவாது!

# காவிரியில் தண்ணீர் திறக்க அரசு கடுமையான அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

**சென்னை, செப். 4 -**

**"நாட்டின் முதுகெலும்பு, நம் விவசாயிகள்..." எனும் வாய்ச்சொல் பேச்சு மட்டும் உதவாது. டெல்டா பகுதி யில் பயிர்களைக் காப்பாற்ற காவிரியில் இருந்து தண்ணீர் திறக்க தமிழ்நாடு அரசு கடுமையான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.**

*இதுகுறித்து 3.9.2026 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-*

*தமிழ்நாட்டில் சுமார் 16 லட்சம் ஏக்கர் பரப்பளவிற்கும் அதிகமாக சாகுபடி மேற்கொள்ளப்படும் காவிரி ஆற்றுப்படுகையின் உயிர் நாடியாக விளங்குகிறது, மேட்டூர் அணை.*

*சேலம் மாவட்டம், மேட்டூரில் அமைந்துள்ள இந்த பிரமாண்ட அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கான தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். நடப்பாண்டு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக கடந்த ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்படவில்லை.*

*இந்நிலையில், சம்பா சாகுபடிக்கான தண்ணீரை முதல்வர் விஜய் நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார். 91 அடியாக நிறைந்துள்ள மேட்டூர் அணையில் இருந்து அடுத்த 45 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளது.*

*முதல்வர் திறந்துவிட்டுள்ள இந்த தண்ணீர் கடைமடை வரை போய் சேராது, பாதி தூரத்திற்குத்தான் செல்லும். அதுவும், பயன்படாத தண்ணீராகத்தான் தெரிகிறது என்கிறார்கள், விவசாயிகள். காரணம், மேட்டூர் அணையில் தற்போதைக்கு 91 அடிதான் தண்ணீர் இருக்கிறது. அதுவும் 45 நாட்களுக்கு மட்டும்தான் கொடுக்க வேண்டும் என உத்தரவு*



தினகரன்
செப்டம்பர் 3, 2026 வியாழக்கிழமை
கடைமடை கலக்கம்...!
தமிழ்நாட்டில் சுமார் 16 லட்சம் ஏக்கர் பரப்பளவிற்கும் அதிகமாக சாகுபடி மேற்கொள்ளப்படும் காவிரி ஆற்றுப்படுகையின் உயிர் நாடியாக விளங்குகிறது, மேட்டூர் அணை. சேலம் மாவட்டம், மேட்டூரில் அமைந்துள்ள இந்த பிரமாண்ட அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கான தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.
நடப்பாண்டு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக கடந்த ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்நிலையில், சம்பா சாகுபடிக்கான தண்ணீரை முதல்வர் விஜய் நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார். 91 அடியாக நிறைந்துள்ள மேட்டூர் அணையில் இருந்து அடுத்த 45 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளது.
முதல்வர் திறந்துவிட்டுள்ள இந்த தண்ணீர் கடைமடை வரை போய் சேராது, பாதி தூரத்திற்குத்தான் செல்லும். அதுவும், பயன்படாத தண்ணீராகத்தான் தெரிகிறது என்கிறார்கள், விவசாயிகள். காரணம், மேட்டூர் அணையில் தற்போதைக்கு 91 அடிதான் தண்ணீர் இருக்கிறது. அதுவும் 45

*வந்துள்ளதால், இந்த தண்ணீர் போதுமானதாக இருக்காது என்கிறார்கள்.*

*மேலும், 110 நாள் பயிருக்கு, 45 நாட்கள் மட்டுமே தண்ணீர் விட்டால், மீதமுள்ள 65 நாட்களுக்கு தண்ணீர் கொடுப்பது யார்? என கேள்வி எழுப்புகிறார்கள். இதற்கு ஒரே தீர்வு, கர்நாடகா அரசு காவிரியில் தண்ணீர் திறப்பது மட்டுமே. இதை செய்தால்தான் டெல்டா பகுதியில் உள்ள பயிர்கள் பிழைக்கும்.*

*எனவே, கர்நாடகா அரசிடம் போராடி, நமக்கு கிடைக்கவேண்டிய நியாயமான தண்ணீரை பெற்று, 110 நாட்களும் தண்ணீர் திறந்துவிட்டால் மட்டுமே டெல்டா காப்பாற்றப்படும். இல்லையேல், பயிர்கள் கருகும், விவசாயி வாழ்வு பாழாகும். இதுவரை, அதிக மழைப்பொழிவு காரணமாக 11 முறை மட்டுமே மேட்டூர் அணை முன்கூட்டியே திறக்கப்பட்டுள்ளது.*

*மேட்டூர் அணையின் 93 ஆண்டு கால வரலாற்றில், காலதாமதமாக 62வது முறையாக பாசனத்துக்கு முதல்வர் தண்ணீர் திறந்து விட்டுள்ளார். இது, வேதனைக்குரிய விஷயம். மேலும் வெறும் 45 நாட்கள் மட்டுமே தண்ணீர் திறப்பு என்பது வீண் வேலை. ஒரு வேளை, நீரின் அளவு அதிகரித்தால் தண்ணீரை வெளியேற்றுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டாலும், இதற்கு, எந்த உத்தரவாதமும் கிடையாது.*

*மிக குறைந்த எண்ணிக்கையிலான டெல்டா விவசாயிகள், போர்வெல் வசதியை பெற்றிருந்தாலும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிட்டதால், குறுவை சாகுபடிக்கு காவிரி நீரை நம்பியே இருக்கிறார்கள். போர்வெல் இல்லாத டெல்டா மாவட்ட விவசாயிகள் முழுக்க முழுக்க காவிரியை நம்பியே பயிர் செய்து வருகிறார்கள்.*

*எனவே, 45 நாட்களுக்கு நீர் திறப்பு என்பதை மாற்றி, ஒரு நாளைக்கு 1 டிஎம்சி என்கிற விகிதத்தில் நிறுத்தாமல் 100 நாட்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன்படி தண்ணீர் திறக்க வேண்டுமென்றால், காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை கர்நாடகா அரசு மதிக்கவேண்டும். இதற்கு தமிழக அரசு, மிக கடுமையான அழுத்தம் கொடுக்க வேண்டும். "நாட்டின் முதுகெலும்பு, நம் விவசாயிகள்..." என வெறும் வாய்ச்சொல் பேச்சு மட்டும் உதவாது.*

*இவ்வாறு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.*



நீதிக்கட்சி ஆணை

'ஆதி திராவிடர் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்காவிட்டால், அப் பள்ளிகளுக்கு அரசு மானியம் கிடையாது' என்ற ஆணையை நீதிக்கட்சி ஆட்சி பிறப்பித்தது. (G.O. 87, Education dated 16-1-1923)

**Genz தலைமுறைக்குத் தெரிய வாய்ப்பில்லை...**

**சமுதாய மாற்றத்தை கொண்டு வந்த இயக்கம்தான் திராவிட சித்தாந்தம்..**